# சுட்டி

## சுய அறிமுகம்

**பெயர்:** சுட்ட வேண்டியதைச் சுட்ட உண்மையான பத்திரிகையே இல்லையா என்ற தாகவெறிக்குப் பிறந் குழந்தை இந்தச் "சுட்டி"

**அளவு:** வியாபார பத்திரிகைகளில் பாதி அளவு; அ போதும்! கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டும் இன்னொ பரிசோதனை இது. இந்தக் குட்டி 32 பக்கங்கள், கம்ப்யூட்ட யுகத்தின் தேவைக்கேற்ப தன்னைச் சின்னதாக்கிக் கொண் பெரிய கருத்துக்களின் மினியேச்சர் வடிவம்.

**விலை:** நமது சராசரி தமிழர்களின் பொருளாதார நிலை யையும், வாங்கும் சக்தியையும் முன்னிட்டு, தமிழில் மிக குறைந்த விலையுள்ள மாத ஏடாக 25 காசுக்கு! ஏனெனி உண்மையான மக்கள் பத்திரிகையாக இருக்க விரும்புகிறோம் [தமிழர்களின் சராசரி மாதவருவாய் சுமார் ரூ. 20.]


**எழுத்து:** புத்தம் புதிய புதுமை—அழகுணர்ச்சி—இவை மட்டுமின்றி பூமியின் இந்தப்பகுதியில் வெளிச்சம் விழவேண் டிய இருட்டுகளைச் சுட்டும்! மனம் சுட்டு நொந்தவர்களின் எழுச்சிக்கு வழி சுட்டும்! கை சுட்டாலும் சுட்டும்!

**பயணம்:** கலை, இலக்கியத்தில், சமுதாய அரசியலி உண்மையான புதியன படைக்க, ஓர் ஆனந்த விடியலைக் குறி வைத்து எங்களோடு முற்போக்கு மாணவர்கள், இளைஞர்கள் ஆசிரியர்கள், கலைஞர்கள், புதியவர்கள் பயணம் வரு கிறார்கள்' வாசகர்களும் கைகோர்த்து வரலாம்!



www.thamizham.net - Free E Books No TM 14702

# மூன்றாவது மாற்று?



தமிழகத்தின் அரசியலைத் தீர்மானிக்கும் இருகட்சிகள் தி.மு.க.-அ.தி.மு.க; இவைகளின் தலைவர் மறைந்த திரு.அண்ணாதுரை. ஆக தி.மு.க.-அ.தி.மு.க. இரண்டுமே ஒரு நாணயத்தின் இரு முகங்கள். திரு.அண்ணாதுரை அரசியலின் ஆதாரத் தூண்களாய் இருந்தவர்கள் கிராமப் புறத்தில் உள்ள நடுத்தர, பணக்கார, வறிய விவசாயிகள். இந்த மக்கள் 1950-க்கு முன் தீவிரமான ...யூனிஸ்ட், காங்கிரஸ் ஆதரவாளர்களாக இருந்தனர். இந்த இரு கட்சி...ம் செய்த தவறுகள் அணுகுமுறைக் கோளாறுகள், அவற்றின் மீது மக்...க்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. அண்ணாதுரை அதை நன்கு பயன்...ந்திப் பதவி பிடித்தார். ஆனால் எப்போதும் போல் அப்போதும் தி.மு.க. ...ம் தெளிவான மாற்றுத்திட்டம் இல்லை. கொஞ்சநாளிலேயே திரு. ...ண்ணாதுரை தடுமாறினார்- அவர் மறைவுக்குப் பின் திரு. கருணாநிதி ...மிச்சுகம் கண்டார். ஆனால் கொள்கையற்ற தி.மு.க. மக்கள் செல்வாக்கை ...ழந்தது. இதை எம்.ஜி.ஆர். ஏதேதோ காரணம் சொல்லி அ.தி.மு.க. ...சியை உண்டாக்கினார். 'இவர் அண்ணாதுரையைவிடப் பிரபலமானவர் ...ணாநிதியைவிட யோக்கியமானவர்' என்று குறிப்பாக விவசாய மக்கள் ...பி அ.தி.மு.க.வை ஆதரித்தனர்.

ஆக மொத்தமாகக் கூட்டிச் சேர்த்தால் திராவிடக் கட்சிகளின் அரசியல் ...பது, காங்கிரஸ், கம்யூ. கட்சிகள் செய்த தவறுகள். இதுபோக தற்...லிக யுத்திகள், தனக்கு எதிரான நிலையைத் தானே எடுத்து அதை தானே ...ப்பது போன்ற புத்திசாலித்தனமற்ற சாமியாடி வேலைகளே யாகும். ...ாத வெகுவாக மக்கள் உணரும்போது திரு. நாராயணசாமி நாயுடு எந்த ...வேஷமும் போடாமல் பிரச்னையை முன்வைத்து சாலையில் இறங்கினார். இது ...மு.க., அ.தி.மு.க.விற்கு பெரும் அடியாக விழுந்தது.

இப்போது விவசாயிகளைத் தங்கள் பக்கம் கொண்டுவர அவரவர் வழி...யில் பிரயத்தனப்படுகின்றனர். இந்நிலையில் திரு. நாராயணசாமி ...யுடுவோ அண்ணாதுரை, எம்.ஜி.ஆர். பானிகளைக் கலந்து சிலம்பெடுத்து ...ஒகட்டி அரசாங்கத்தின் முன் வணக்கம் செய்கிறார். தேசியக் கட்சிகள் ...ன்று மார்தட்டும் கட்சிகளோ இங்கும் அங்குமாகக் குட்டை மாதிரிப் பாசி ...ர்ந்து தேங்கிக்கிடக்கின்றன. எல்லா வகையிலும் ஒரு மூன்றாவது மாற்று ...வேண்டிய நிலை; மக்கள் அதற்காகக் காத்திருக்கின்றனர். அது நல்லதாக ...ருக்குமா? இருக்கட்டும்!



www.thamizham.net - Free E Books No TM 14702

# தெளிவு பிறக்கவே குழப்பம்



கடந்த 10 ஆண்டுகளாக இந்தியா ஓர் ஒழுங்கில்லாத போர்க்களம் மாதிரி தோன்றுகிறது. விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள், பெண்கள் இவர்களின் நேரடியான போராட்டங்கள் ஒருபுறம் வியாபாரத் துறையிலும், உற்பத்தித் துறையிலும் போட்டி வடிவத்தில் நடைபெறும் போராட்டம் மறுபுறம். எல்லாவற்றையும் பார்க்கும்போ இந்தியாவின் அடிப்படைப் பிரச்னையே இன்னும் தீரவில் என்ற முடிவுக்கே வரமுடிகிறது. குறிப்பாக இந்தியாவி பிரதான உற்பத்தியான விவசாயத்துறைக்கும், தொழி துறைக்கும் ஓர் ஒத்திசைவு இல்லை.

ஆட்சிக்கு வருபவர்கள் இப்பிரச்னைகளைக் கண்மூடி கொண்டு, பார்க்க மறுக்கிறார்கள்; அல்லது எதிர்க்கட்சிக மீது பழியைப் போடுகிறார்கள். அதேபோல எதிர்க்கட் கள் வெறுமனே ஆளும் கட்சியை எதிர்ப்பதற்கு இவை களைப் பயன்படுத்துகிறார்கள். எனவே இன்றைய இந்திய வின் உருவம், மிகவும் குழப்பமாக உள்ளது. ஒரு தெளி பிறக்க ஒரு குழப்பம் தோன்றுவது இயல்பே. அந்த வ யில் தான் இதைப் பார்க்க வேண்டும்.

அதை விட்டுவிட்டு அமெரிக்காவைப் பார்! ஜப்பானை பார்! ருஷ்யாவைப் பார்! சீனாவைப் பார்! என்று சில அ நியப் பேனாக்கள் பேப்பரில் வாந்தி எடுக்கின்றன போது போதும். முதலில் நம் நாட்டைப்பார்ப்போம்; பிறகு ரஷ்ய அமெரிக்காவெல்லாம் புரியும் என்ற விதத்தில் இந்தியாவை பார்ப்போம். அது நமது ஆன்மா!

—நான

www.thamizham.net - Free E Books No TM 14702



## அமெரிக்கா

பணயக் கைதிகள் ஒரு வழியாய் விடுவிக்கப்பட்டார்கள். இருபெரும் அரசுகளின் சொந்த மோதல் காரணமாக பாடுபட்டது சில அப்பாவி ஜந்துக்களே. ஈரானைப் பொருத்தமட்டில் அவர்களுடைய தேசச் செல்வம் மீட்கப்படவேண்டும்; நியாயமானதே. ஆனால் மெரிக்கா ஏதோ தன்னாட்டு சொத்துப்போல் இவ்வளவு ட்கள் சொந்த மக்களுடன் மல்லுக்கட்டியதே அதுதான் காடுமை. கேவலம் தங்கம்! அமெரிக்கா, மன்னன் ஷாவுக் க வரிந்து கட்டியதன் உள்நோக்கம் இப்போது புரிகிறது; ிந்தது அது மட்டுமா? ஈரானின் ஆட்சியாளர்களுடன் மூக மாற்றத்திற்காக புரட்சி நடத்தியதாகக் கூறியது வறும் ஏமாற்றே. சமீப காலமாக உலகம் முழுவதும் ளர்ந்து விட்ட அதிகார வர்க்கம் சாதாரண மக்களின் யிரைத்தான் குறிவைக்கிறது. ஒருகோடி டன் தங்கத்தை ட ஒரு மனிதன் எவ்வளவோ முக்கியமானவன்; ஏன் வர்களுக்குப் புரியவில்லை?.

## சீனா

மாசேதுங் மனைவிக்குத் தூக்குத் தண்டனை கலாச்சார புரட்சிக்காலத்தில் செய்த தவறுகளுக்காக ற அறிவித்து உள்ளது நாம் எதிர்பார்த்ததுதான். காரணம் ன் விசித்திரமாய் உள்ளது. கலாச்சார புரட்சிக்காலத்தில் ந்தது தவறு என்று விவாதிக்க வரவில்லை. ஆனால் லாச்சார புரட்சி என்பது திட்டமிட்டு அமைப்பு ரீதியாக சியால் நடத்தப்பட்டது. ஆகவே சரியோ தப்போ ல்லோருக்குமே பங்கு உண்டு. அதில் இப்போது பதவி ல் உள்ளவர்களும் அடங்குவார்கள். ஒரு சாரார் முழுக்கத் வறு, ஒரு சாரார் முழுக்கச்சரி என்று கூறுவது சிறுபிள்ளைத் னமான பேச்சு. மக்கள் சீனா சமீப காலமாக இப்படி திகமாகவே பேசுகிறது.



www.thamizham.net - Free E Books No TM 14702

## சென்னை :
## தியேட்டர்கள்-ஒரு மினி விமர்சனம்

**சித்ரா :** அழகான பெயருடைய இந்த தியேட்ட இருக்குமிடம் அழுக்குக்குப் பெயர் போன கூவத்திற்கு அருகில்.

**காஸினோ :** ''ஏஸி'' தியேட்டர் என்றாலும் முக்கா வாசி நாட்கள் ''ஏஸிநோ.''

**வெலிங்டன் :** மிருகங்கள் சஞ்சாரம் செய்யும் இட (தேவருக்கு ராசியானது).

**லியோ :** பாபிக்கும் மிட்லண்டிற்கும் திருமண நடந்து அவை பெற்றெடுத்த குழந்தை

**ஸ்டார் :** என்னுடைய 'மேனி எழிலுக்கும், பர மரிப்புக்கும் காரணம் 'யதோங்கி பாரத்

**ஆனந்த் :** முதன் முதலாக அகன்ற திரையுடன் ஆரம்பிக்கப்பட்ட தியேட்டர். அகால வேளை சம்பவங்களைக் கொண்ட பட களால் புகழடைந்தது.

**நியூஎல்பின்ஸ்டன் :** ''எம்டன்'' குண்டுக்கு, தப்பி தியேட்டர் கார்ப்பரேஷன் குண்டுக்கு பலியானது.

**சாந்தி :** அண்ணாசாலையின் நடுநாயகமான திரை யரங்கம். சாந்தியடையாத ஆத்மா ஒன் உலவுவதாகக் கேள்வி.

**கபாலி :** இரத்தப் பரிசோதனை இங்கு இலவசமா செய்து தரப்படுகிறது.—ஆர்.சந்திரசேகர



www.thamizham.net - Free E Books No TM 14702

# சூரியனில் வீட்டுமனை விற்பனை

அமெரிக்காவைச் சேர்ந்த நிலவிற்பனை நிறுவனம் ஒன்று சூரியனில் 2½ அமெரிக்க டாலருக்கு ஒரு வீட்டுமனை என விளம்பரம் செய்திருக்கிறது. இதனைப் பார்த்துவிட்டு ஏராளமானோர் நிலம் வாங்கியிருக்கிறார்கள்.

இது 'பச்சைப் பொய், ஏமாற்று வேலை' என்று சிலர் அந்நிறுவனத்தின் முன் நின்று கூச்சலிட்டார்கள். இத்தகையோருக்கென அந்நிறுவனம் துண்டு பிரசுரம் ஒன்று வெளியிட்டுள்ளது. அதில் இப்படி ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள் :-

நாளுக்கு நாள் வெப்பம் குறையும் சூரியன் ஒரு நாள் வடித்துச் சிதறக் கூடும். முன்னொரு காலத்தில் சூரியனிலிருந்து சிதறிய துண்டுகளே, இன்று நாம் காணும் கோளங்களும் நம் பூமியும் ஆகும். குளிர்ந்த நிலையில் உயிரினங்கள் தோன்றி, மாடமாளிகைகள் உருவாகியுள்ளன. எனவே சூரியன் மீண்டும் சிதறி, பின்னர் குளிர்ந்து உயிரினங்கள் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டதும், அந்தப் புதிய காலத்தில் உங்களுக்கு வீட்டுமனை தருகிறோம் என்று அந்நிறுவனம் கூறுகிறது.

தற்போது பள்ளிக் குழந்தைகளின் பெயர்களில் ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் சூரியனில் வீட்டுநிலம் வாங்கியுள்ளனர்.

இது பற்றிக் கருத்துரைத்த ஒரு தம்பதியினர், நிலம் வாங்கியதற்கான சான்றிதழ் 2½ டாலர் பெறுமானது. அழகானது, சூரியனைப் பற்றிச் சுவையான தகவல்கள் அடங்கியது என்று கூறினர்.

சூரியனிலும் எங்களுக்கு நிலமுண்டு, என்று இந்தச் சான்றிதழை வேடிக்கையாக எண்ணியவாறு வீட்டில் அழகாக மாட்டிக்கொள்ளலாம். நம் குழந்தைகளுக்கும் பெருமையாக இருக்கும் என்று சில தம்பதியினர் மகிழ்கின்றனர்.

—*ஆதாரம்* : வானம்பாடி



www.thamizham.net - Free E Books No TM 14702

## ஆசிரியர்கள்

நாங்கள்... ...
பயிற்றுவிக்க நாங்கள் தயார்
ஆனால்
பாடங்கள் எங்களுக்குத்தான் ஏற்படுகின்றன
அறிவு கொளுத்தத்தான் வந்தோம்
வெளிச்சத்தில் பார்க்கும்போதுதான்
அறியாமைக்குத்தான் உரமூட்டி
வளர்த்துள்ளோம் என்று உணர்கிறோம்
பகுத்தறிவுப் பாசறையில்
நாங்கள்தான் தானைத் தளபதிகள்
ஆனால்
அறிவுபூர்வமான மூடநம்பிக்கைகள்
ஆதாங்களுடன் வளர்வதற்கு
ஆணிவேர்களை உருவாக்கி
எங்களை நாங்களேயும்
மற்றவர்களை நாங்களேயும்
ஏமாற்றிக் கொண்டு
'விடிந்துவிடுமோ' என்ற அச்சத்தில்
விழித்துக் கொண்டிருக்கிறோம்
நாங்கள் ஆசிரியர்கள்
யாருக்கோ ?

—சரவணன்



www.thamizham.net - Free E Books. No TM 14702

# பூசணிக்காய்

'கடம்பனிட்ட ராமகிருஷ்ணன்' கவிதைகளைக் கோவை ரணம்பாடி சிறப்பிதழாக வெளியிட்டுள்ளது. ஒரு நாண த்தை சுண்டிவிடுங்கள், அதன் சுழற்சியில் அழகும் ஒரு ணகணப்பும் கிடைக்கும். கடம்பனிட்ட கவிதைகளில் ாதாரண வார்த்தைகள் அப்படிச் சுழல்கின்றன.

பூசணிக்காய் என்ற கவிதை சாதாரண அல்ப, விஷயங் ள் எளிதான கருத்துக்கள் முதலியவற்றைக் கூட ஆழமாக ார்த்தால் இயக்கத்தை மறுக்க முடியாது என்று எடுத்துக் றுகிறது. கொத்துத் தண்ணீரை முகத்தில் அடித்தமாதிரி நயாண்டி. கண்ணனூர்க் கோட்டை என்று கவிதை திகார வர்க்கத்தின் அல்ப ஆயுளையும் மனிதனின் நிரந் ரத்தையும் தைரியமாக முன் வைக்கிறது.

'சுல்தான்கள் தப்பியோடிய இருண்ட குகைகளில் லகத்தின் வெளிச்சம் நுழைவதில்லை' என்று ஒரு தட்டுத் ட்டி அவர்களுடைய போக வெறியை முட்டாள்கள் வெற்றி ழாக் கொண்டாடியிருக்கலாம் என்று கன்னத்தில் அறை றது. இது போதும் அவர் உணர்வை நாடி பிடிக்க.

இவை போக 'குறத்தி' இந்த அமைப்பையே கேள்விக் ரியதாக்குகிருள். கடைசி ஓவியம் கலடாப்பூர்வமான படைப் ாக இருந்தாலும் சில இடங்கள் குதறுகின்றன. ஆண்களைப் ார்த்து 'வெளிச்சம் விளங்காத நாம் எத்தனை யோக்கி ர்கள்' என்று குறிபார்த்து எய்கிறது.

பொதுவாக அவருடைய கவிதைக் கண்களின் வழியாய், ாமும் சமூகத்தைப் பார்க்கிறோம். சரியாகவே காட்டுகிருர். ழகாகவும் தான். மொழி பெயர்ப்பு சாலப்பொருத்தம்.

—நாணக்



www.thamizham.net - Free E Books No TM 14702

## தேசச் சிற்பிகளுக்கு அஞ்சலி

அந்தப் பையன்
மனப் பாடம் செய்கிருன்
தயவு செய்து—
அவன்
தனிமையில்
குறுக்கிடாதீர்கள்
'தேசத்தந்தை
காந்திஜி!
கப்பலோட்டிய தமிழன்
வ. உ. சி.!
கொடிகாத்தவன்
குமரன்'
ஓ...!
தேசச் சிற்பிகளுக்கு அஞ்சலியா?
இல்லவேயில்லே
நாளை—அவனுக்குச்
'சரித்திரத் தேர்வு'
தயவு செய்து
அவன் தனிமையில்
குறுக்கிடாதீர்கள்.

—ரோகிணி



www.thamizham.net - Free E Books No TM 14702

## 'ஆக்ரோஷ்!'

ஓர் ஆதிவாசிப் பெண் வசதி படைத்த நவீன மனித ரால் குதறப்பட்டு கொலை செய்யப்படுகிறாள். அந்தப் பழியை அவளுடைய கணவனே சுமந்து நீதி மன்றத்தில் வாய்மூடி நிற்கிறான். இதைக் கண்ட ஒரு இளம் வக்கீல் அவனிடம் மன்றாடி வாய்திறக்க வைத்து உண்மையை அறிகிறான். ஆனால் சாட்சிகள் இல்லை. அதற்காக அலையும் போது அந்த ஆதிவாசியின் தந்தையும் கொலைப்படுகிறார். தந்தைக்குச் சிதைவைக்க வந்த ஆதிவாசி அந்த இடத்திலேயே தன் வயதுவந்த தங்கையைக் கொன்று இந்தச் சமூகத்திலிருந்து விடுதலை செய்து விடுகிறான்! இளம் வக்கீல், சீனியரிடம் தலையில் அடித்துக்கொள்கிறான். அவர் அமைதியாகச் சட்டம் சொல்வதே உண்மை; வேறு கேஸைப் பார் என்று போய்விடுகிறார்.

இது கதை. பிசிறடிக்காத இந்தியக் கதை. இதற்கான சாட்சிகள் தினசரிகளில் ஏகமாக வருகிறது. சமீபத்தில் திடுக்கிட வைத்த ஒரிஸ்ஸாவின் ஜஹாம் ராணியின் கொலை மிகக் கொடுமையான சாட்சி. அந்த ஆதிவாசி தன் தங்கையைக் கொல்வது நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

இந்தப் படத்தை பார்க்காவிட்டாலும் நாம் பார்த்திருக்கிறோம். படத்தின் டைரக்டர் பெயர் தெரியாது. அவசியமும் இல்லை. வாழ்க்கையின் அவலங்களைக் கோபமாகக் காட்டியுள்ளார். கோபப்படுவதே ஒரு கலையின் தேவையாகி அதுவும் வெளிப்பட்டுவிட்ட பிறகு பரிச்சியங்கள் என்ன வேண்டிக் கிடக்கிறது? இந்தப் படத்தின் முக்கியமான பிரஜைகளாக நஸ்ருதீன் ஷா, அமிதா பட்டேல் நடித்துள்ளார்கள். நமது நடிப்பு நமக்கு திருப்தியில்லாமலா போகும். மெய்யாகவே அவர்கள் சத்தியமான கலைஞர்கள், மெய்யாகவே இது ஒரு இந்தியப் படம்; வந்தால் பார்ப்போம்!

—நானக்.

www.thamizham.net - Free E Books No TM 14702

# சென்சார் கொஞ்சம் கவனிக்க!

நாட்டில் நெஞ்சை உருக்கும் கொலைச் சம்பவங்க பெருகிவிட்டன. அண்மையில் சேலத்தில் மணி என்னு 19 வயது இளைஞன் தன் தம்பியைக் கொலை செய்து அவ சாம்பலைத் தன் தந்தைக்கே பார்சல் மூலம் அனுப்பியிரு கிறான். இது பத்திரிகைச் செய்தி.

இவ்வளவு கொடியவனாக அவன் மாறக் காரணம் என் என்பதை நாம் அறிய வேண்டும்.

போலீஸ் விசாரணையின்போது அவன் உண்மையை சொல்லிவிட்டான்.

தமிழ்நாட்டில் ஒரு திரைப்படம் இதேபோன்ற கருணை யற்ற செயலைக் காட்டுகின்றது. அதைப் பார்த்துத் தானு அப்படியே செய்ததாக அந்தச் சேலத்துக் கொலைச் சிறுவ ஒத்துக் கொண்டிருக்கிறான்.

இந்த உண்மை நிகழ்ச்சியைப் பார்த்த பிறகாவது ந சென்சார், வன்முறை, கொலை காட்சிகளை வெட்டுமா? கு கும் குத்துக்கள் குறையுமா?

—கு. நா. பார

---

*"இந்தியாவில் உள்ளதுபோல வளமார்ந்த செல்வர்களை நான் என் நாட்டிலும் காணவில்லை; பசியாலேயே செத்து மடியும் ஏழைகளும் இங்குதான்! இதை எப்படி இரு சாராரும் அனுமதிக்கிறார்களோ?*

—ஜப்பானிய சகோதரி





www.thamizham.net - Free E.Books No TM 14702

# விமானப் பணிப் பெண்களின் வாழ்விலிருந்து....

இந்தியன் ஏர்லைன்ஸ் ஏறத்தாழ 510 விமானப் பணிப் பெண்களை வேலையில் அமர்த்துகிறது. இப்பெண்களின் வேலை நீடிப்பது மேனி கட்டுக்குலையாமல் இருக்கிறதா என்ற பரிசோதனையின் அடிப்படையிலேயே! இதனால் மருத்துவப் பரிசோதனைகளின் பெயரில் இப்பெண்கள் ஆண் மருத்துவர்களிடம் மட்டுமே தம்மை முழுவதும் திறந்து காட்ட வேண்டிய கொடுமைக்குத் தள்ளப்படுகின்றனர். ஏனெனில் இந்தியன் ஏர்லைன்ஸ் பெண் மருத்துவர்களை நியமிப்பதில்லை.

நட்சத்திர ஒட்டல்களில் கட்டணமின்றி தங்க அனுமதிக்கப்படும் இவர்களுக்கு உணவுக்கு மட்டும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு உணவுக்காக மட்டும் ரூ. 100 கொடுக்கப்படுகிறது. நட்சத்திர ஒட்டல்களின் ஏற்பாடு விலைப்பட்டியல் உணவுக்குப் பதிலாகத் தங்கத்தை விழுங்கும் உணர்வையே இவர்களுக்குத் தோற்றுவிக்கிறது.

ஒரு விமானப் பயணத்தில் இருவர் நன்றாக மதுவருந்திவிட்டு விமானப்பணிப் பெண்களுக்கு ஓயாது தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர். பொறுமை எல்லை கடந்த நிலையில் அப்பணிப் பெண்கள் விமானியிடம் புகார் செய்தனர். அந்தக் குடிகாரர்கள் விமானியிடமும் முரட்டுத்தனமாக நடந்து கொண்டனர். உடனே விமானி பாதுகாப்பு நிறுவனத்தைத் தயார் நிலையில் வைக்குமாறு கண்ட்ரோல் நிலையத்திற்குச் செய்தி அனுப்பினார்.

விமானம் இறங்கியது. பாதுகாப்புப் படையினருக்கு குற்றவாளியைக் காண்பிக்க விமானி தயாராக இருந்தார். குற்றவாளிகள் வந்தனர். அவர்களைக் கண்டதும் பாதுகாப்புப் படையினர் சல்யூட் அடித்தனர். ஏனெனில் குற்றவாளிகள் வேறு யாருமல்ல, பாதுகாப்புப் படையினரின் அதிகாரிகளே!

(ஆதாரம்: Probe) —நிலா

www.thamizham.net - Free E Books No TM 14702

# இப்படியும் விலைவாசி!

## பயமாக இருக்கிறதா?

| | | |
|---|---|---|
| மசாலா அல்லது சாதா தோசை | ரூ. | 6-50 |
| இட்லி சாம்பார் சட்னி | ரூ. | 6-50 |
| வடை சாம்பார்; சட்னி | ரூ. | 6-50 |
| உப்புமா சட்னியுடன் | ரூ. | 6-50 |
| ஊத்தப்பம் சாம்பார் சட்னி | ரூ. | 7-50 |
| பூரி பாஜி | ரூ. | 12-00 |
| தயிர் சாதம் | ரூ. | 8-00 |
| தயிர் வடை | ரூ. | 8-00 |
| டீ | ரூ. | 6-00 |
| காப்பி | ரூ. | 6-00 |
| பால் | ரூ. | 7-00 |
| போர்ன்விட்டா | ரூ. | 8-00 |
| லஸ்ஸி | ரூ. | 8-00 |
| சோடா | ரூ. | 5-00 |

21ஆம் நூற்றுண்டு விலைவாசி போல இரு கிறதா? சென்னை 5 நட்சத்திர ஓட்டல்களில் உள் இன்றைய விலைப் பட்டியல்தான் இது. சாதாரண ஓட்டல்களைவிட 10 மடங்கிற்கு அதிகமாய் வி போடுகிருர்கள். அந்த அளவிற்கு அதில் ரு இருக்குமா?

—ஆதாரம்; Chola Sheraton: Room Service Car



www.thamizham.net - Free E Books No TM 14702

# சாகித்திய அகாடமி பரிசு—ஒரு விளக்கம்

சாகித்திய அகாடமி 1954-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் தேதி துவங்கப்பட்டது இதன் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 82. இதன் முதல் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள். தற்போது திரு. உமாசங்கர் ஜோஷி அவர்கள் இதன் தலைவராக இருந்து வருகிறார்.

தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம், உருது, சமஸ்கிருதம், கன்னடம், மலையாளம், கொங்கணம், மராத்தி, பஞ்சாபி, ஒரியா, சிந்தி, பெங்காலி, அஸ்ஸாமி, குஜராத்தி, மணிப்பூரி, ராஜஸ்தானி, காஷ்மீரி, மைதிலி, டோக்ரி, நேபாளம் ஆகிய 22 மொழிகளில் உள்ள சிறந்த படைப்புகளுக்கு இந்த அகாடமி பரிசு வழங்கி வருகிறது.

எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட தாமிரப் பலகையும், 5000க்கான ரூ சோலையும் அடங்கிய பேழை பரிசாகக் கொடுக்கப்படுகிறது.

சாகித்திய அகாடமி பரிசுக்கெனச் சில விதிகள் உண்டு.

1) பரிசு வழங்கப்படும் ஆண்டுக்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் முதன்முதலாக வெளியிடப்பட்ட சிறந்த இலக்கிய மதிப்புடைய புத்தகங்களே இப்பரிசுக்குத் தகுதியானவையாகும்.

2) ஒருமுறை பரிசுபெற்றவர் மறுமுறையும் பரிசுபெறத் தகுதியற்றவராகிறார்.

3) எந்தவொரு புத்தகமும் பரிசுக்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்வுக்குழுவினரின் முன் நிரூபிக்கப்பட்டால் அப்புத்தகம் பரிசுபெறும் தகுதியை இழக்கிறது.


கவிஞர் கண்ணதாசனின் 'சேரமான் காதலி' என்னும் சரித்திர நாவல் தமிழில் 1980-ம் ஆண்டுக்கான சாகித்திய அகாடமி பரிசைப் பெறுகிறது!

—நிலா.



www.thamizham.net - Free E Books No TM 14702

# காப்பி, தேநீர் அருந்துங்கள்!



"காப்பியா! ஐயோ வேண்டாம் சார்." இப்படித்தான் பலர் சொல்வதை அடிக்கடி கேள்விப்படுகிறோம்.

ஆம் உண்மையிலேயே இது பழைய ஆராய்ச்சிப் படி உண்மையே. ஆனால் கலிபோர்னியாவில் அண்ண யில் நடந்த ஆய்வு மனதுக்கு—காப்பி பிரியர்களுக்கு ஆ தல் தருவதாக உள்ளது. அங்கே கிளாட்ஸ்கி (Klotsk என்றும் இருதய மருத்துவ டாக்டர் இந்த பிரச்னையை 4 இருதய நோயாளிகளை வைத்துக்கொண்டு ஆய்வை நட தினர்.

அவரது கண்டுபிடிப்பு அமெரிக்க மருத்துவக் கத்து மலரிலும் வெளியிடப்பட்டுள்ளது. காப்பி குடி தற்கும் மாரடைப்புக்கும் (Heart attack) கொஞ்சமும் பந்தமே இல்லை. எனவே தேநீரைப் போலவே காப்பிை யும் அளவாக அருந்தலாம் என்று உலகிற்குத் ஆராய்ச்சி முடிவை வெளிப்படுத்தினர்.

தேநீர் உடம்பிற்குத் தீங்கு செய்யாது என்பதே மட்டும் அல்ல; அது ஒரு சிறந்த பானம். நாடி நர களுக்குச் சற்று ஓய்வை அளித்து உற்சாகமும் அளிக் உன்னத பானம் என்பதே ஆய்வாளர்களின் முடிவு.



www.thamizham.net - Free E Books No TM 14702

# ஜப்பானிய சகோதரி பேசுகிறார்!

சகோதர ஆசிய நாடுகளை உற்றுப்பார்த்துப் படிக்க வேண்டும் என்ற ரகத்துடன் வந்துள்ள 40 வயது ஜப்பானிய சகோதரி சிஸ்டர் பியுமிங்கோ பியுஜிட்டாவிடம் சில கேள்விகளைக் கேட்டேன். நாம் சினிமாவிலோ, பத்திரிகையிலோ பார்க்கின்றதைவிட வித்தியாசமான ஜப்பானை, ஜப்பானியர்களைக் ரட்டினார்கள்.

கே: ஜப்பான் வளமான நாடு தானே?

ப்பியுஜிட்டா: இந்தியாவைவிட பல மடங்கு இயற்கையில் ஏழ்மையான ாடு. எந்த வளமும் இல்லை. இந்தியாவில் உள்ள வளம் எங்கள் நாட்டில் ருந்தால் இன்னும் எத்தனையோ சாதிப்போம்! இந்தியாவில் வளம் இருந் ம் மக்கள் தாங்க முடியாத அளவிற்கு வறுமையில் உழல்வதைக் காண்கி றன். புரியவில்லை! கைநீட்டி ஒவ்வொரு நகரத்திலும் சிற்றூர்களிலும் ச்சையெடுக்கும் ஆயிரமாயிரம் பேர்களைக் கண்டு கண்ணீர் விட்டேன்! னிதன் கேவலமாகப் பிச்சையெடுப்பதை என் வாழ்வில் முதன் முதல் இங்கு ான் பார்க்கிறேன். மலமும், சிறுநீரும் தெருவோரங்களில் கழிப்பதைக் ண்டு திடுக்கிடுகிறேன்.

கே: இந்தியாவைப் பற்றி ஜப்பானியர்கள் என்ன புரிந்துகொண்டிருக் றார்கள்?

ப்பியுஜிட்டா: எங்களைப் பற்றி இங்குள்ளவர்கள் தெரிந்துவைத்துள்ளதை ட அதிகமாகவே புரிந்துகொண்டிருக்கிறார்கள். உலகத்தில் இப்படியொரு ாடு அல்லல்பட்டு வறுமையில் உழல்வதை மாற்ற ஏதாவது செய்ய வேண் ம் என்று நினைக்கும் ஆயிரமாயிரம் ஜப்பானியர்கள் இருக்கிறார்கள். எங்கள் ள்ளிக்கூடங்களில் சிறு பிள்ளைகளிடம், முதல் வகுப்பு படிப்பவர்களிடம் சென்று பரியவனானபின்னர் என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டால், இந்தியா க்குப் போய் அங்குள்ள மக்களுக்கு உதவப்போகிறேன் என்று சொல்லும் ற்றுக்கணக்கான இளந்தளிர்களைக் காணமுடியும். எங்கள் சிறப்பங்காடி ளில் (Shopping Centre) இந்தியா, பங்களாதேஷ், வியட்நாம் போன்ற ன்தங்கிய நாடுகளுக்கு உதவும்படி கண்ணாடி உண்டியல் ஜாடிகள் வைத் ருப்பார்கள். மாலை அவையெல்லாம்-சிறப்பாக இந்திய உண்டியல்-நிரம்பி ழியும். நாடு முழுவதும் பல பெரிய அங்காடிகளில் இப்படி ஏராளமான ணம் பொதுமக்களால் வசூலித்து அனுப்பப்படுகிறது. ஆனால் அது இங்கு ப்படி பயன்படுத்தப்படுகிறது என்று தெரியவில்லை. எங்கள் பள்ளியைச் ார்ந்த குழந்தைகளும் நாங்களும் வாரத்தில் ஒரு வேளை உண்ணாவிரதமிருந்து தனால் சேமிக்கும் தொகை கொண்டு, தென்னிந்தியாவில், சிக்மகளூர் நுதியில் உள்ள கிராமத்தின் சில குழந்தைகளைப் படிக்க வைத்துக்கொண் நக்கிறோம்.

இந்தியாவை நான் அதிகமாக நேசிப்பதால்தான் இங்கு வந்திருந்த பாது நான் கண்ட பல அவலங்களை என்னால் தாங்க முடியவில்லை.

புதிய இந்தியாவை இளையதலைமுறை உருவாக்குமா?

பேட்டி: எழில்

www.thamizham.net - Free E Books No TM 14702

# மசாலா பத்திரிகைகள்



மக்களை மந்தப்படுத்தும் ஒரே மாதிரி யான மசாலா பத்திரிகைகள்தான் தமிழ் நாட்டில் இலட்சக் கணக்கில் விற்கின்றன. அட்டையை மட்டும் உரித்துவிட்டால் இந்த எல்லாப் பத்திரிகைகளும் கிட்டத் தட்ட ஒன்றுதான். அவற்றை மக்களுக்கு இனம்காட்டு பணியை இப்பக்கம் தொடர்ந்து செய்யும்.

திரு. ஜெயகாந்தன் சரியாக குறிப்பிட்டமாதிரி குமு ஓர் எலும்பில்லாத புழு; ஆனந்த விகடன்– ஒரு போலி பண்டிதனின் அடக்கத்துடன் பழையதைப் பழையதாகவே தரும் அக்ரஹாரப் பத்திரிகை.

சாவி–பழைய விஷயங்களையே வார்த்தைகளைப்புதுசாக் விற்றுவிடும் சூரன். வார்னிஷ் எழுத்துக்கள்; ஆனா வெயிலில் காயாத வார்னிஷ். குங்குமம்– இந்த மசாலா களின் பாமரத்தனமும் அரைவேக்காடு அரசியலும் கலந்த கட்சியின் கட்சி அல்லாத பத்திரிகை.

ஆசிரியரிலிருந்து, 'பின்–அப்' போடும் பையன் வ ஒரே மூளை வளர்ச்சியுடையவர்களால் நடத்தப்படும் ஒ பத்திரிகை இதயம் பேசுகிறது. பேனு மினுக்கிகள், மே மினுக்கிகள் சேர்ந்து மஞ்சள் பத்திரிகைகளைச் சாடும் ம சள் பத்திரிகை.

இவை பழைய லிஸ்டு. புதிதாக திசைகள். இளைஞ களை வைத்து இந்த உலகத்தையே கசக்கிப் பிழிந்து சா எடுப்பது போல விளம்பரம். கடைசியில் பார்த்தால் சக்கை யையே மீண்டும் அழுத்தி தண்ணீர் சேர்க்கும் தெ வோரத்து நாணயமற்ற கரும்புச்சாறு வியாபாரி வேலை.

மயன்– தமிழ்நாட்டில் குட்டி அமெரிக்காவைக் கட்ட அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கம்ப்யூட்டர் திரு உதயமூர்த்தியின் அவதாரம். ஆனால் கம்ப்யூட்டரை விட புத்தி கட்டை. அடுத்த இதழில் 'இதயம் பேசுகிறது' அகப்படும்.

—நானா

www.thamizham.net - Free E Books No TM 14702

சிறுகதை:

# கற்பனைக்கு மேனி தந்து...

முகுந்தன் ஒரு பத்திரிகையாசிரியர்; அஞ்சா நெஞ்சம் கொண்ட 30 வயது இளைஞர். இந்திய நாட்டிலுள்ள சமூக விரோத சக்திகளை வேரோடு களைந்தெறிய வேண்டும் என்னும் 'தணியாத தாகத்துடன் பேனாவைப் பிடித்துத் தன் வாழ்வையே பத்திரிகைக்கு அர்ப்பணித்தவர்.

ஒருமுறை இவர்தம் கனல் பறக்கும் நேர்மையான எழுத்துக்கள் நாடு முழுவதிலுமுள்ள மக்களது உணர்வுகளைத் தட்டியெழுப்பவே அநீதிக்கு சப்பைகட்டு கட்டும் சட்டங்களை இயற்றும் பார்லிமெண்ட் கட்டிடத்திற்குத் தீ வைத்தது மட்டுமன்றிச் சட்டப் புத்தகங்களையும் தீயிலிட்டனர். வழக்கம் போல் சுப்ரீம் கோர்ட் முகுந்தனுக்கு, தண்டனை வழங்கும் வகையில் அவரை நாடு கடத்தியது. கிளம்பும்போது:—

"நாடு கடத்தப்படுவது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மக்கள் விழித்துக்கொண்டு விட்டனர். வைட்டமின் 'ப' சக்தி குறையுடைய நான் இதுவரை புத்தகங்களிலும் கனவிலும் தான் பிற நாடுகளைக் கண்டிருக்கிறேன். இப்போது நான் போகும் இடம் இயற்கை வளம் கொழிப்பது. கலப்படமில்லாத சத்துள்ள இயற்கை உணவும், தூயகாற்றும், போலி நாகரிகமும் அநீதியும் அறியாத பழங்குடி மக்களின் வெள்ளை உள்ளமும் என் உடலையும் உள்ளத்தையும் ஊக்குவிக்கும். என் பேனா என் தாய் நாட்டின் எதிர்காலம் பற்றிய என் கனவுகளை நூல்களாக வடிக்கும். பெரிய அறிஞர்களின் வரிசையில் இடம்பெறப்போவது குறித்து நான் பெருமையடைகிறேன்" என்றார். சில நிமிடங்களில் கப்பல் நீரைக்கிழித்துக்கொண்டு செல்ல ஆரம்பித்தது.

டி.வி.யில் குடியரசுதினவிழா முடிந்து விட்டதை அறிவிக்கும் ஒலி எழுந்தது. திடுக்கிட்டு எழுந்தான் முகுந்தன். இப்போதுதானே இந்தியாவில் கருப்பு வெள்ளை டி. வி. அரைகுறையாக இயங்க ஆரம்பித்திருக்கிறது என்று சலிப்புடன் ஸ்விட்சை அணைத்தான். பாவம்! முகுந்தன் கற்பனையில் லயித்திருந்த ஒரு வேலையில்லாப் பட்டதாரி. —நிலா.

www.thamizham.net - Free E Books No TM 14702

# மதுரைத் திருவிழா முடிந்தது!

உலகத்தமிழ் மாநாட்டில் சில உரத்த சிந்தனைகள் நெஞ்சில் கனக்கின்றன. தமிழ் ஆடம்பரமாக விழா கண்டுவிட்டது. தமிழர் விழா காண்பது எந்நாள்?

68-இல் சிலைகள் என்ற பெயரில் பறவையின் கழிப்பிடங்கள்; 80-இல் மதுரையில் மனிதனின் முதல் தேவையை நிறைவேற்றுவது போல உண்மையிலே கழிப்பறைகள் 155. செலவு 94 இலட்சம். ஒரு பகல்பொழுது முழுவதும் அங்கேயே இருப்பதுபோலல்லவா தமிழக மக்களை நினைத்துக் கட்டியிருக்கிறார்கள்!

கவியரங்கு - தமிழ் வணக்கம், புரட்சித்தலைவர் வணக்கம், வையை வணக்கம், மதுரை நகர் வணக்கம், மீனாட்சி வணக்கம் பாடி ஓய்ந்த பின்னரே கவிஞர்கள் தங்கள் தலைப்பை நாடினர், சில கவிதைகள் படித்து முடிக்கப்படாமலேயே 'அறுவை' எனக் கைமொலி கேட்டு இருக்கையில் அமர்ந்தன. கண்ணதாசன் தலைமை 'ப்ளேபாய் ஜோக்ஸால்' அவையை நிறைத்தது.

திறப்பு விழாவுக்கு வந்திருந்தோர் 50,000 பேர். அதில் பாதிப்பேர் பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்கள். வைஜயந்தி மாலா, ஜெயலலிதா, பாலமுரளி கிருஷ்ணா இவர்கள் நிகழ்ச்சிக்காகவே இந்தக்கூட்டம்.

1966-இல் கோலாலம்பூர் மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியரல்லாத வெளிநாட்டுப் பேராளர்களில் 10 சதவீதத்தினர் கூட மதுரை மாநாட்டில் இல்லை. கோலாலம்பூரில் சுமார் 100 இந்தியரல்லாத பேராளர்கள் வந்திருந்தனர்.

இவ்விழா மூன்று நாட்களில் முடிவடைந்திருக்கலாம். பிரதமரை அழைத்து தம் கூட்டத்தின் பலத்தைக் காட்ட முயன்றிருப்பது யாருக்குத் தெரியவில்லை. இந்த விழாவால் சேமித்திருக்க வேண்டியது மூன்றுமாத அளவிற்கான மின்சாரம்.


மதுரையில் கண்டது 'புகார்' காண்டமே ஒழிய வேறில்லை. உண்மையான தமிழ் மக்களை 'வஞ்சி'க்கும் காண்டமே. மொழியின் பேரால் தோன்றியது சிலப்பதிகாரமல்ல. ஏழையின் வறுமைக் கண்களில் படர்ந்திருப்பது சிவப்பதிகாரமே!

—மேனகா பொன்சேகர்.



www.thamizham.net - Free E Books No TM 14702

# பல்லவனிடம் ஒரு பல்லவி



சென்னை வாசிகளின் நலனைக் கருதி செயல்பட்டு வரும் பல்லவன் நிர்வாகம் மாணவர்களின் பயணச் சீட்டு வழங்கு முறையின் குறைகளைக் கண்டு கொள்வதில்லை. நீளமாக இருக்கும் அடையாள அட்டை கிழிந்து விட்டால் நெடுநேர விசாரணைக்குப் பிறகுதான் டோக்கன்களைப் பெற முடியும். பல சமயங்களில் "ஒட்டிக் கொண்டு வா" என்று ஒரே வார்த்தைப் பிரயோகத்தில் நம்மைப் பேசமுடியாமல் செய்து விடுகின்றனர். தொலைத்து விட்டாலோ பத்து ரூபாயைக் கட்டி "டுப்ளிகேட்" அட்டைக்காக அதிகாரிகள் சிலரைப் பார்க்க வெகு நேரம் காத்திருக்க வேண்டும். நாலு கவுண்டர்களிலும் சரியானபடி நபர் வரவில்லையானால் அன்று பாஸ் வாங்குவதற்குப் பிரம்மப் பிரயத்தனம் பண்ணவேண்டி வரும். இரண்டு மாணவ நண்பர்கள் அறுபது டோக்கன்களை முறையே பெற்று பஸ்ஸில் பயணம் செய்ய நேர்ந்த போது அவர்களின் அட்டையில் உள்ள எண்களைக் காரணம்காட்டி சிறிய சர்ச்சையில் இறங்கியிருக்கின்றனர். அதுமட்டுமின்றி டோக்கன்களுக்கான "எக்ஸ்சேஞ்ச்" டிக்கெட்டுகள் சில சமயம் கண்டக்டரிடம் இல்லாமல் இருப்பதால் மாணவர்கள் பயணம் செய்ய அடுத்த பேருந்துக்காக காக்க வேண்டியுள்ளது. பாஸ் வழங்கும்போது பலவிதமான விமர்சனங்களுக்குள்ளாகிறார்கள். எந்த எதிர்ப்பும் காட்டாமல் மாணவர்களும் மௌனம் அனுஷ்டிக்கின்றனர். நிர்வாகத்தின் உடனடி தலையீட்டால்தான், இப்பிரச்னைகளுக்குத் தீர்வு என்பது இருக்க, நடைமுறையில் மாற்றம் எப்பொழுது என்று மாணவர்கள் கவலைப்படுகிறார்கள்.

—சுவிசா சிசுபரன்



www.thamizham.net - Free E Books No TM 14702

## காதில் விழுந்த உண்மைகள் !

'என்ன ராமச்சந்திரன், எப்படி இருக்கீங்க ?'

'என்ன சார்! ஒரே போர். நானும் காலேயிலிருந்து என்னென்னமோ செஞ்சு பாக்கறேன். டைம் போகமாட்டேங்குதே. பெரிய பேஜாரா இருக்கு.'

'நீங்க எவ்வளவோ தேவலாம் சார். உங்களுக்கு ஒரு நாளைக்கு ரெண்டு, சமயத்திலே மூணு 'பைல்' கூடவந்துடுது என் பாடு இன்னும் மோசம். எனக்கு சுத்தமா 'பைலே கிடையாது எனக்கு எவ்வளவு பேஜாரா இருக்கும் பாருங்க!

—மாநில அரசின் ஒரு அலுவலகத்தில் 'லிப்ட்டு'க்காக காத்திருந்தபோது இரண்டு அரசாங்க அலுவலர்களின் மிக சீரியசான உரையாடல் இது.

இடையில், சுமார் 52 வயது மதிக்கத்தக்க ஒரு அப்பாவி மனிதர் கையில் ஏதேதோ ஃபார்ம்கள், பேப்பர்களுடன் 'எக்ஸ்க்யூஸ்மீ சார். இந்த 'ஃபார்ம்ஸ்,' 'ஃபில் அப்' பண்ணியாகிவிட்டது. இதை தபால் செக்ஷனில் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு எந்தப் பக்கம் போவது?' என்று மிகுந்த ஆர்வத்துடனும், பரபரப்புடனும் கேட்கிறார். பாவம் மனிதர் எவ்வளவு தூரத்திலிருந்து எப்படி அலறி, பதறி ஓடிவந்திருக்கிறாரோ !

ராமச்சந்திரன் எனப்பட்டவர் மிகுந்த எரிச்சலுடனும், வெறுப்புடனும், யாரோ குஷ்டரோகி பிச்சைக்காரன் அவரைத் தொட்டுப் பிச்சை கேட்டுவிட்ட அருவருப்புடனும் 'நேராகப் போய் 'ரைட்'டில் திரும்பு' என்று உமிழ்கிறார். அந்தப் புண்ணியவானுக்கு தெண்டச் சம்பளம் கொடுக்க பாடுபட்டு வரிகட்டும் அந்த அப்பாவி பொதுஜனம் வேகமாக நகர்ந்ததும், 'என்ன ராமச்சந்திரன் தபால் செக்ஷனுக்கு இந்தப் பக்கம் அனுப்புகிறீர்கள் ?'

'போய் எங்கிட்டாவது. சுத்தித் தொலையட்டும், காலேயிலிருந்து இதே வேலையாகப் போய்விட்டது. தபால் செக்ஷனுக்கு பாதை சொல்லி, சொல்லி பெரிய தலைவலியாகப் போய்விட்டது.'

லிப்ட் வந்துவிட்டது அதுவரை காதில் பட்டது இவ்வளவே.

—சுயராஜ்

www.thamizham.net - Free E Books No TM 14702

# புகையே! போ போ போ

கி. பி. 1604ஆம் வருஷம். ரொம்ப பழைய வரலாற்றுச் செய்தி என்று நினைக்காதீர்கள். என்னுடைய புகையொழிப்பு அறப்போராட்டத்திற்கு அன்றே போர்க்கொடியை உயர்த்தி ரதிர்ப்புக்காட்டிய இங்கிலாந்து மன்னன் முதலாம் ஜேம்ஸ், முதல் முழக்கம் செய்த முக்கியமான ஆண்டு.

'புகையிலை கெட்டது, புகை பிடித்தல் உயிருக்கு ஆபத்து' என்று அன்றே குரல் கொடுத்த கொற்றவன் அவன். இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் அந்தப் புகை ரக்கனை எதிர்த்துப் போரிடவேண்டியிருக்கும்.

அறிஞர்களே! விஞ்ஞானிகளே! ஆசிரியர்களே! புறப் டுங்கள், புகையொழிப்பு அறப்போராட்டத்திற்கு.

புள்ளி விபரங்களுடன் பொதுமக்களுக்குச் சொல்லுங் கள். அவர்கள் முடிவுசெய்து சொல்லட்டும்.

அமெரிக்காவில் இதுவரை வியட்நாம் போருக்காக இறந்தவர்கள் 14,521 பேர். கார் விபத்துக்களில் இறந்த வர்கள் 55,500 பேர் புகையருந்துவதால் ஏற்படும் சாவு கள் 3,00,000 பேர்.

இந்தப் புள்ளி விவரங்களைவிட நமக்குத் தெம்பு அளிக் க் கூடிய செய்தி ஒன்றிருக்கிறது.

"அமெரிக்கப் பொதுநல சுகாதாரத்துறை" எடுத்த ள்ளி விவரங்களின் படி அமெரிக்காவில் இன்று புகை ஒழித் தவர்களின் எண்ணிக்கை 3 கோடிப் பேர்கள்.

—கு. நா. பாரதி

*தலைவர்:* புகையொழிப்பு இயக்கம்.



www.thamizham.net - Free E Books No TM 14702

# பிச்சைக்காரர்கள்

"கேளுங்கள் கொடுக்கப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் என்றார் யேசு பெருமான். நடைமுறையில் இது சாத்தியமல்ல என்பது பிச்சைக்காரர்களுக்கு நன்ருகவே தெரியும் எனவே இவர்கள் பிச்சை கேட்கும் வித்தை மக்களைக் கவரும் ஒரு கலையாகவே வளர்த்திருக்கிருர்கள்.

'தர்ம கைங்கரியங்கள்' மக்களை மோட்சத்திற்குள் அனுமதிக்கும் மெரிட் சர்டிபிகேட்டுகள் என்று தர்மத்திற்குச் சமயங்கள் விளம்பரம் கொடுக்கின்றன. அதுமட்டுமல்ல பணக்காரர்களுக்குத் தம் செல்வத்தைப் பற்றிய ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்துவதும் இந்தச் சமயங்களே. இந்த உணர்வுக்கு வடிவங்களாகவே திருத்தலங்கள் தமது வாயில்களில் பிச்சைக்காரர்களை முன்நீண்ட கரங்களுடன் கொலுவிக்கின்றன.

கடவுளைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் குறைவாகவே அறிந்துள்ள இவர்கள் வாய் வாழ்த்துக்களை விற்கத் தெரிந்த சூரர்கள். கடவுளரின் படங்களைக் கையிலேந்தி பிச்சை கேட்பவர்களை 'இறைவன் பெயரைச்சொல்லிப் பிழைக்கிருன் பார்' என்று சாடுகிறது இச்சமுதாயம்.

பிச்சைக்காரர்கள் நவீன திரைப்படப் பாடல்களைப் பாடி ஆடி, வித்தைகள் காட்டி ஏழை மக்களையும் மகிழ்விக்கத் தெரிந்தவர்கள் மக்களின் மூடநம்பிக்கைகளைப் பயன்படுத்திக்கொண்டு ஆசீர்வதிக்கவும், சபிக்கவும் தெரிந்தவர்கள் கல்லூரி மாணவ, மாணவியரை திரைக் கலைஞர்களுடன் ஒப்பிட்டுப் பேசி அவர்களுக்குக் கனவுகளை விற்கத் தெரிந்தவர்கள். உடல் ஊனங்களைக் காட்டி உள்ளத்தை மெழுகாய் உருக்கத் தெரிந்தவர்கள். எதிர்பாராத நேரத்தில் கரங்களைப் பற்றிக் கொண்டு இக்கட்டான நிலைக்கு ஒருவரை இட்டுச் செல்லத் தெரிந்தவர்கள். தன்மானத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்கள்.

வறுமையும் அனுபவமும் இவர்களது அறிவை மனோதத்துவ ரீதியில் இயங்கவைத்துத் திறமைகளை வளர்த்திருக்கின்றன.

— நில

www.thamizham.net - Free E Books No TM 14702

## உடனே ஏலம் போடுங்கள்

பாரி தேரை விட்டுச் சென்றான் என்று தமிழ் இலக்கியத்தில் படித்திருக்கிறேன். மாஜிஸ்டிரேட் கோர்ட்டு, தாலூக்கா ஆபீஸ், காவல் நிலையங்களின் வாயிலில் இத்தகைய காட்சியை நீங்களும் காணலாம். பல ஆண்டுகளாகக் கேட்பாரற்றுப் புதைபொருள் இலாகாவின் அகழ்வாராய்வுப் பொருள்களைப் போல குப்பையும் புதரும் மண்டிப்போய் ஏராளமான அம்பாஸடர் கார்கள், ஸ்டாண்டர்ட் கார்கள், சைகிள்கள் மக்கி மடிந்துகொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

அவையெல்லாம் கொலை, கள்ளக்கடத்தல், சாராயம் கேஸ்களில் பிடிபட்டவையே என்பது உண்மைதான்.

ஆனால் அவை பிடிபட்ட உடனேயே வீணாகாமல் ஏலத்தில் விற்றுப் பொருளை அரசாங்க கஜானாவில் சேர்த்துவிடலாம். பிறகு கேஸ் எப்படி முடிகிறதோ அதன்படி அந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்யலாமே! —கு. நா. பாரதி



www.thamizham.net - Free E Books No TM 14702

# உடலை விட்டுச் செல்லும் அனுபவம்

டாக்டர் ஆந்திரிஜா புகாரிச் புகழ் பெற்ற புலன் கடந்த உளவியல் ஆராய்ச்சியாளர். மூன்று நாட்களாக தொடர்ந்து அவர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அவர் மிகவும் சோர்வடைந்திருந்தார். அப்போது அவருக்கு நேர்ந்த அனுபவத்தை கூறுகிறார்:—நான் படுத்தேன்... திடீரென்று நான் (உண்மையான நான்) கூரைக்கருகில் மிதந்துகொண்டு என் உறங்கும் உடம்பை நோக்கிக்கொண்டிருந்தேன். அது வெறும் ஜடப்பொருளாக எனக்குப்பட்டது. அதனிடம் எனக்கு ஒரு சிறிதும் அக்கறையில்லை.

இத்தகைய அனுபவங்கள் உலகில் பலருக்கும் ஏற்படுகின்றன. இத்தகைய அனுபவத்தை "உடலை விட்டுச் செல்லும் அனுபவம்" என்று புலன்கடந்த உளவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆங்கிலத்தில் இது O O B E (OUT OF BODY EXPERIENCE) எனப்படும். இத்தகைய O O B E அனுபவத்தில் தன் பிரக்ஞையானது தன் பருவுடலுக்கு வெளியே உள்ளது போன்ற அனுபவத்தைப் பெறுகிறான். இத்தகைய அனுபவத்தை அடைந்த ஒருவன் தான் மரணத்திற்குப் பின்னும் வாழமுடியுமென்று திடமாக எண்ணுகிறான்.

இத்தகைய அனுபவங்களைப் பற்றிய ஆராய்ச்சியை முதன் முதலில் டாக்டர் ராபர்ட் க்ருக்கால் என்ற பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் தொடங்கினார். தற்போது அமெரிக்க லேசர் விஞ்ஞானிகள் ரஸ்ஸல் டார்க், புத்தாஃப், முதலியவர்களால் ஸ்டான்ஃபோர்ட் ஆராய்ச்சி நிலையத்திலும், பேராசிரியர் சார்ல்ஸ் டார்ட்டாய் என்பவரால் கலிஃபோர்னியாப் பல்கலைக் கழகத்திலும் இத்தகைய O O B E ஆய்வுகள் நடத்தப் பெறுகின்றன. இந்த ஆய்வுகளின் மூலம் பிரக்ஞையானது (மனம்) உடலை விட்டு தனித்து வெளியே இயங்க முடியும் என்று கருதப்படுகிறது.

—ரமேஷ்



www.thamizham.net - Free E Books No TM 14702

# ○ ○ ○ ○ ○ 'சிறிய மூட்டைத் தூக்கிகள்'

இன்று பள்ளிக் குழந்தைகள் படித்தாலும் படிக்காவிட்டாலும் 'மூட்டைத் தூக்கி' ஆக வேண்டும். ஆம்! புத்தக மூட்டைதான்! மக்கிய நிலையில் சக்தியற்ற உணவுத் தானியங்களை மூட்டை மூட்டையாக 'ரேஷன் அட்டை'யின் பெயரால் வாரி வழங்குவது போலவே வாழ்க்கைக்கு உதவாத, அரசியல் அந்துப் பூச்சிகளால் துளைக்கப்பட்ட நூல்களைப் 'பாட நூல்' என்னும் சட்டைக்குள் ஜனநாயகத்துடன் அறிவும் அறவே வறண்ட இன்றைய கல்வித்துறை வழங்குகிறது—இளம் குழந்தைகளுக்காக!

அடிப்படைக் கல்வி பற்றி ரூஸ்ஸோ, ரஸ்ஸல், தாகூர், காந்தியடிகள் ஆகியோரின் கருத்துக்களை NCERT பாடப் புத்தகங்களுக்குள் அடக்கிவிட்டது. தமக்குக் கிடைத்த பட்டம் வெறும் செல்லாக்காசுதான் எனப் பட்டதாரிகள் உணர ஆரம்பித்துவிட்ட இன்றைய நிலையிலும் பாட நூல் நிறுவனம் புத்தகச் சுமையை ஏற்றி இந்தியாவின் எதிர்கால வாரிசுகளை நடமாடும் போலி அறிவுக் களஞ்சியங்களாக ஆக்குவதிலேயே அக்கறை காட்டுகிறது.

'பாட நூல் நிறுவனம்' என்னும் பெயரால் கூட்டு வாணிபம் நடத்தும் இன்றைய கல்வித்துறையினர் குழந்தைகளின் உண்மையான அறிவு வளர்ச்சியைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. வளரும் குழந்தைகளின் சுய சிந்தனையிலும் தனித் தன்மையிலும் அக்கறை காட்ட வேண்டிய கல்வி நிறுவனங்கள் 'துணைவர்கள்' மூலம் முதுகுச் சுமையை மூளைச் சுமையாக்குவதிலேயே கவனம் காட்டுகின்றன.

சுய சிந்தனையின் பாதையில் இந்தியாவின் எதிர்கால வாரிசுகள் வழி காட்டப்பட்டால் போலி அரசியல்வாதிகளுக்கும் புதுப் பணக்காரர்களுக்கும் சாவு மணி அடிக்கப்பட்டுவிடும் என்ற பயம்தான் இந்தப் புத்தகச் சுமைக்குக் காரணமா?

—நிலா



www.thamizham.net - Free E Books No TM 14702

# வேள்வியோ வேள்வி

புராண காலங்களில் அசுவமேத யாகம் என்பார்கள். அதுபோன்ற யாகங்கள் இப்போது நின்றுவிட்டன. ஆனால் சில புதுமையான யாகங்கள் தோன்றியிருக்கின்றன.

பாம்பாட்டிகளும், கொஞ்சம் பாம்புவிஷ வைத்தியம் தெரிந்தவர்களும் சும்மா இருப்பதில்லை. அந்தக்காலத்தில் ஆங்காங்கே விஷப்பாம்பு மருத்துவர்கள், மந்திரவாதிகள் இருப்பார்கள். 40 வருஷங்களுக்கு முன் திருச்சிக்குப் பக்கத்திலிருக்கும் ஜீயபுரத்தில் மகாமந்திரவாதியிடம் நான் சில நாட்கள் வளர்ந்தேன். இவர்கள் எல்லாம் மந்திரத்தாலும் மருந்துகளாலும் "விஷமுறிவு மருந்து" கொடுத்து மக்களுக்குத் தொண்டு செய்தார்கள். ஆனால் இப்போது...

சென்ற வாரம் திருவனந்தபுரத்தில் ஒரிளைஞன் பாம்பு வேள்வி செய்வதாகச் சொல்லிக் கண்ணாடிப் பெட்டிக்குள் பல விஷப்பாம்புகளுடன் நுழைந்தான். கொஞ்ச நேரத்திலே கொடிய விஷப்பாம்பு கடித்து இறந்தான்.

இப்படிப் பத்திரிகையில் பார்க்கும்போது பாவமாக இருந்தது.

உலக அருஞ்செயல் தொகுப்புநூல் ஒன்றிருக்கிறதாம். கின்னஸ் புத்தகம் என்ற அந்தப் புத்தகத்தில் தான் இடம் பெற அவருக்கு ஆசை.


புகழ் யாரை விட்டது?

—கு. நா. பாரதி.



www.thamizham.net - Free E Books No TM 14702

# நுகர்வோர் குரல்:



நுகர்வோர் நம் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியமான பிரிவினர். இவர்கள் நாடு முழுவதும் பரவியுள்ளனர். ஒவ்வொரு நபரும் நுகர்வோரே! நுகர்வோருடைய hard earned பணமே நமது தொழிலாளர்களின் உடலில் ஓடும் இரத்தம். இதனை நம்முள் எவ்வளவு பேர் உணர்ந்துள்ளோம்? நமது பாடுபட்ட பணத்தைக் கொடுத்து நாம் பொருள் வாங்கியவுடன் நமக்கும் அதனை விற்போர், உற்பத்தியாளர் ஆகியோருக்கும் உறவு முடிந்து விடுவதாக நாம் எண்ணுகிறோம்; அல்லது அந்த நிலைக்குத் தள்ளப்படுகிறோம். ஆனால் உண்மையில் அப்பொழுதுதான் அந்த உறவு ஆரம்பமாகிறது.

உற்பத்தியாளர்—விற்போர்—நுகர்வோர் உறவு சமநிலையில் வைக்கப்பட்டுள்ளதா எனில், அது இல்லை என்றே கூறவேண்டும். விற்கும் வரை விளம்பரங்கள்; விற்றபின்? தனித்து விடப்பட்ட நுகர்பவர், கொடுத்த பணத்தின் மதிப்பையும் இழந்து, ஒரு வகையில் ஏமாற்றப்பட்டவராக, பணம் படைத்த உற்பத்தியாளர்களை எதிர்நோக்க இயலாதவராக விடப்படுகிறார். இந்த நிலைபற்றி நுகர்வோர் சிந்திக்க வேண்டும். இதுபற்றி பல அமைப்புகளால் அவர்களுக்கு ஓரளவு நிவாரணம் கிடைக்க முடியும். ஆனாலும் அது போதாது.

இவை பற்றியெல்லாம் இந்தப் பக்கம் உங்களை சிந்திக்க வைக்கும். சிதறிய நெல்லிக்கனிகளாக உள்ள நுகர்வோரை ஒன்றுசேர்க்க உதவும்.

ஒன்றுசேர உங்களது அனுபவங்கள், அறிவுரைகள் எங்களுக்குத் தேவை. சுட்டிக் காட்டுங்கள்,

—வீரா



www.thamizham.net - Free E Books No TM 14702

# பெண் விடுதலை எதிலிருந்து?

பெண்களின் விடுதலை—இன்று அதிகமாகக் கொச்சைப் படுத்தப்படும் ஒரு சமூக நீதி. நமது பெண்களுக்கு விடுதலை அவசியமே—எதிலிருந்து?

மலரும் பருவத்திலேயே மங்கையரை அழித்து விடும் வரதட்சணை என்னும் கொடிய அரக்கனிடமிருந்து விடுதலை வேண்டும்.

மருமகளைச் சக்களத்தியாகப் பாவிக்கும் மாமியார்களாக, ஒரு ஆணையும் பெண்ணையும் ஒன்ருகப் பார்த்த நொடியில் 'அவர்களைக் காதலர்களாக எண்ணி கிசுகிசுக்கும் நடமாடும் மஞ்சள் பத்திரிகைகளாக, ஆடம்பர வாழ்விற்காக கற்பை வைத்து வாணிபம் நடத்தும் விபச்சாரிகளாக, வீட்டுக் கோழியாகவும், குழந்தை பெறும் எந்திரமாகவும் இருப்பதே பெண்ணின் பெருமை என்னும் நினைவுடன் வயது வந்ததும் தம் பெண்ணின் கல்விக்கு முற்றுப்புள்ளிவைத்து கல்யாணச் சந்தையில் தம் பெண்களை நிறுத்திவைக்கும் தாய்மார்களாகத்—தம் இனத்தையே கடித்துக் குதறும் பெண்ணிகளிடமிருந்தே விடுதலை வேண்டும்.

காலத்திற்கேற்ப தன் மனைவியும் வேலைக்குப் போக வேண்டும் என்பதில் முற்போக்குவாதியாகவும், மனைவிக்கு சமையலில் உதவினுல் 'சூஜாதூக்கி' என்று பெயர் வாங்கி விடுவோமோ என்று அஞ்சும் பிற்போக்குவாதியாகவும் இரட்டை வேடம் போடும் கணவனிடமிருந்து விடுதலை வேண்டும்.

தமது கற்பனைக் குதிரையை கட்டுமீறி ஓடவிட்டு பெண்களை இச்சைப் பொருளாக்கும் முறைகளைக் கதைத் தறியில் பின்னி சமூகத்தில் நஞ்சைக் கலக்கும் நயவஞ்சக எழுத்தாளர்களிடமிருந்து நமது பெண்களுக்கு விடுதலை வேண்டும்.

—நிலா.



www.thamizham.net - Free E Books No TM 14702

**FOR ANYTHING IN**

**PRINTING AND ADVERTISING**

CONTACT :—

Phone : 612547

# SS Enterprises

1569, ANNA NAGAR, MADRAS-600 040.

- Labels
- Pamphlets
- Posters
- Cartons
- Books
- Calendars
- Diaries
- Tin Printing
- Screen Printing
- Stickers
- Purses
- Key Pouches
- Complimentary Articles
- Advt. Materials



www.thamizham.net - Free E Books No TM 14702

அறிவியலைச் சந்தேகித்தான்;

## புது அறிவியல் பிறந்தது!

கற்றுத் தந்த விஞ்ஞானத்தைச் சந்தேகித்தான். ஆசிரியரைச் சந்தேகித்தான். வானத்தையும் வார்த்தைகளையும் ஒப்பிட்டான். வித்தியாசப்பட்டன. டேபிளில் உட்கார்ந்தான். மூளையை உழுதான். எல்லா ஜடங்களும் பேசின. வெளிச்சமான அவன் முன் நெற்றி வியர்த்தது. இறுதியாக வாய் திறந்தான்:

"மனிதர்களே உங்களுடைய அளவீடுகள், உங்கள் பரிசோதனைச்சாலை எல்லாவற்றையும் சரிபண்ணுங்கள் உங்கள் பூமியின் விஞ்ஞான அனுபவங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு விடாதீர்கள். வானம் வித்தியாசமானது" என்று கூறித் தனது வியர்வையை உதறினன்.

சக்தி பற்றிய தேற்றங்கள் மனித இனத்திற்குக் கிடைத்தன.

ஆனல் யாருமே விரும்பாத வகையில் அதிகாரவர்க்கம் 'ஹிரோஷிமா நாகசாகி'யை உருவாக்கி அந்த மேதையை அவமானப்படுத்தியது.

மனம் நொந்தான்.

அவன்தான் ஒப்புமைத் தத்துவத்தையும், ஆற்றலின் விதியையும் கண்ட ஐன்ஸ்டீன்.

—நானக்



www.thamizham.net - Free E Books No TM 14702

## வாசகர்களிடம் கொஞ்சம் தனியாக...

இந்த இதழின் வெற்றிக்கு உதவியவர்கள்—

மாணவர்கள் : சுவிசா சிசுபரன், ஆர். இராமகிருஷ்ணன், பாலாஜி, சுதீந்தரன், அருள்மணி.

ஓவியங்கள் : எம். ஷேக் அப்துல் காதர், பம்மல்.

புகைப்படம் : பேராசிரியர் H. V. விஸ்வேசுவரன்.

அட்டைப்படச் சுட்டிக்குழந்தை : கயற்கண்ணி

இன்னும் பின்னணியில் பேருதவி புரிந்த ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள், புதியவர்கள்.

* இந்த இதழ் பற்றிய விமர்சனங்கள் எவ்வளவு கடுமையாக இருந்தாலும் இருகரம் நீட்டி வரவேற்கப்படுகின்றன. உங்கள் எதிரொலிகளைத் தினமும் எதிர்பார்த்திருப்போம்.

* இந்த ஏட்டின் அமைப்பிற்கு ஏற்ற படைப்புக்களை யாரும் எழுதலாம். வரவேற்கிறோம். பாரபட்சமின்றி, சிபாரிசின்றி தக்கவை கட்டாயமாக வெளியிடப்படும்.

* அடுத்த இதழ்— மார்ச் 15-ஆம் தேதி இன்னும் தெளிவோடும் உற்சாகத்தோடும் புதுமையோடும் வருமென எதிர்பாருங்கள்.

* 12 இதழ்களுக்குச் சந்தா ரூ. 3-00

* எல்லாத் தொடர்புகளுக்கும் :—

ஆசிரியர்,

சுட்டி

8, கஜபதி தெரு

சென்னை - 600 030.

ஆசிரியர், வெளியிடுவோர் : கமலா நாராயணன், சென்னை-31

அச்சிட்டோர் : ஜெயஹனுமான் அச்சகம், சென்னை-53.

www.thamizham.net - Free E Books No TM 14702

www.thamizham.net - Free E Books  No TM 14702

பிப்ரவரி 1981—தனி

## 25 காசுக்கு இவ்வ


சுய அறிமுகம்
ாடு
ர்
ரில் விட்டு மனை....
பர்கள்
க்காய்
சிற்பிகளுக்கு....
ாக்காத படம்
சென்சார்....
விமானப் பணிப்பெண்கள்
இப்படியும் விலைவாசி
சாகித்ய அகாடமி
காப்பி, தேநீர்....
ஜப்பானிய சகோதரி....
17 மசாலா ப ைகள்
18 கற்பனைக்கு மேனி தந்து
19 மதுரைத் திருவிழா
20 பல்லவனிடம் ஒருபல்லவி
21 காதில் விழுந்த உண்மை
22 புகையே போ போ போ
23 பிச்சைக்காரர்கள்
24 உடனே ஏலம்....
25 உடலை விட்டுச்செல்லும்...
26 சிறிய மூட்டைத்தூக்கிகள்
27 வேள்வியோ வேள்வி
28 நுகர்வோர் குரல்
29 பெண் விடுதலை
30 விளம்பரம்
31 அறிவியலே....
32 வாசகர்களிடம்....


www.thamizham.net - Free E Books - No.TM 14702